ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

ප්‍රාදේශීය කාර්යාලය / பிராந்திய நிலையம் / Regional Office
දුරකථනය / தொலைபேசி / Telephone No.
දිනය / திகதி / Date

சனாதிபதிக்கான செயலாளர்

செயலாளர் / பாதுகாப்பு அமைச்சு

பதில் பொலிஸ் பொது ஆய்வாளர்

**ஊரடங்கு உத்தரவை ஒழுங்குபடுத்தல் மீதான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள்**

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரங்கு உத்தரவை மீறியமைக்காகவும் , அதனைத் தொடர்ந்து கொவிட் 19 உலகம் பரவு நோய் தொற்றினை கருதியும் அதிக எண்ணிக்கையான நபர்கள் கைது செய்யபப்ட்டமையையும் , வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டமையையும் மனித உரிமைகள் ஆணைக்குழு (ஆணைக்குழு) அவதானிக்கிறது. நிகழ்காலத்தில் நாடு எதிர்கொள்வதைப் போன்ற அசாதாரண சுகாதார அவசரநிலையின் போது பொது சுகாதாரம் மற்றும் பொது ஒழுங்கு என்பனவற்றின் மீதான அக்கறையில் நடமாடுவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தலின் தேவையை ஆணைக்குழு முழுமையாக அங்கீகரிக்கின்ற அதேவேளை ஆணைக்குழுவின் ஆணைக்கு அமைய அத்தகு மட்டுப்பாடுகள் அரசியலமைப்பின் தொடர்புடைய உறுப்புரைகள் மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சார் கடமைகள் என்பனவற்றிற்கு இணங்கி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை மேற்பார்வை செய்வதும் இது தொடர்பில் அவசியமான பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு வழங்குதலும் ஆணைக்குழுவின் கடமை ஆகும்.

ஆணைக்குழுவானது இவ்விடயத்தை பெருமளவு மக்கள் அக்கறையை பாதிக்கும் ஒன்றாக கருத்திற் கொண்டு நோக்குகிறது. நிகழ்காலத்தில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறையின் சட்டவாந்தன்மை குறித்த பொதுமக்களின் கருத்து வெளிப்பாடுகளையும் ஆணைக்குழு பெற்றுள்ளது.

21 ஆம் இலக்க 1996 ஆம் ஆண்டின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 10 (இ) மற்றும் (ஈ) என்பனவற்றின் கீழ் அளிக்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைய ஆணைக்குழுவானது காலத்திற்கு காலம் அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது. பிரிவு 10 (இ) மற்றும் (ஈ) பின்வருமாறு குறிப்பிடுகிறது:

பிரிவு 10 – ஆணைக்குழுவின் செயற்பாடுகள் ஆவன:



ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrc@gmail.com
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

(இ) அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் என்பனவற்றின் விருத்திக்காக சட்டவாக்கம் மற்றும் நிர்வாக வழிகாட்டிகள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றை ஆக்குவதில் அரசாங்கத்திற்கு அறிவுறுத்தல் ;

(ஈ) சர்வதேச மனித உரிமைகள் சார் விதிகள் மற்றும் தராதரங்கள் என்பனவற்றிற்கு அமைய உள்நாட்டு சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் என்பன காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை மேற்கொள்ளல்; ...

அடிப்படை உரிமைகளுடன் ( பிரிவு 10 (அ)) தொடர்புடைய அரசியலமைப்பின் உறுப்புரைகளுடன் 'தொடர்புடைய நடபடிமுறைகள்' இணங்கியுள்ளனவா என்பதன் மீதான முறையீடுகளை உறுதிப்படுத்தும் நோக்கில் பரீட்சிப்பதற்கு ஆணைக்குழு ஆணை பெற்றுள்ளது என்பதையும் கருத்திற் கொள்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் , நாட்டில் சமகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு ( நாடு முழுவதும் அல்லது நாட்டின் பாகங்களில்) ஆனது இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சார் கடமைகள் என்பனவற்றை மீறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை பரீட்சிப்பது தொடர்பான விடயம் ஆணைக்குழுவின் சட்டபூர்வமான ஆணைக்கு அமைய அதன் நோக்காகிறது.

ஆணைக்குழு இவ்விடயத்தை தக்கவகையில் கருத்திற் கொண்டு பின்வரும் அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் முன்வைக்கிறது:

i) கொவிட் 19 உலகம் பரவு தொற்று காரணமாக நிகழ்காலத்தில் இலங்கை முகம் கொடுக்கும் முன்னெப்போதும் ஏற்பட்டிராத சுகாதார நெருக்கடி தன்மையால் பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரம் என்பனவற்றின் அக்கறைக்காக நாடு முழுவதையும் அல்லது தேவையான குறித்த பகுதிகளை உள்ளடக்கி ஊரடங்கு உத்தரவு அல்லது நடமாட்டம் மீதான பிற வகைகளிலான மட்டுப்பாடுகள் என்பனவற்றை நடைமுறைப்படுத்தல் அவசியமானது என்பதை ஆணைக்குழு வலுவாக நம்புகிறது.

ii) அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (ஏ) இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட நடமாடுவதற்கான சுதந்திரம் ஆனது மனித உரிமைகளின் சகல பிற அம்சங்களுடன் நெருங்கிய தொடர்புடைய சகல பிரஜைகளுக்கும் முக்கியமான சுதந்திரம் ஆகும். எவ்வாறாயினும் , உறுப்புரை 15 (7) ஆனது உரிமை ஆனது மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது எனக் குறிப்பிடுகிறது. அத்தகு மட்டுப்பாடுகள் அரசியலமைப்பிற்கு உட்பட்டனவாக இருக்க, அவை பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரம் என்பனவற்றின் பாதுகாப்பை உள்ளடக்கிய குறித்த நோக்கங்களுக்காக " சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்டவாறு" இருத்தல் வேண்டும். உறுப்புரையின் கீழ் மட்டுப்பாடுகளுக்கான

நோக்கங்களிற்காக "சட்டம்" ஆனது பொது பாதுகாப்புடன் தொடர்புடைய நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகிறது. (உதாரணமாக, அவசரகால ஒழுங்குவிதிகள்)

iii) அரசியலமைப்பின் உறுப்புரை 15 (6) மற்றும் (7) இற்கமைய மட்டும் தேசிய பாதுகாப்பு காரணங்களிற்காகவும் நடமாடுவதற்கான சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட முடியும் என இலங்கையின் உயர்நீதிமன்றம் தீர்த்துள்ளது. அரசால் மட்டுப்பாடு சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது என நிறுவ முடியாத போது நடமாடும் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமை மீறப்பட்டது ஆகும் ( ***Vadivel v. OIC, Sithambarapuram Regional Police Post, Vavuniya***, (2002) 3 Sri LR 146 ); அவசரகால நிலையின் போதும் தன்னிச்சையான முறையில் பாதையோரங்களில் சோதனை சாவடிகளை அமைத்தல் நடமாடுவதற்கான சுதந்திரத்தை மீறுகிறது (***Rodrigo v. Imalka, SI Kirulapone***, SC (FR) NO.297/2007 S.C.Minute of 03.012.2007).

iv) இதே போன்று, இலங்கையால் மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் சார் கடப்பாடுகள் ஆனவை பொது சுகாதாரம் மற்றும் பொது ஒழுங்கு முதலானவற்றின் பாதுகாப்பு உள்ளடங்கலான குறித்த இலக்குகளை அடைய சட்ட அடிப்படையில் மாத்திரம் நடமாடுவதற்கான சுதந்திரம் மட்டுப்படுத்தப்படலாம் என இனம்காண்கின்றன ( உறுப்புரை 12 , குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச சமவாயம்). அத்தகு மட்டுப்பாடுகள் சகல பிற உரிமைகளுடனும் இணங்கி அமைதல் வேண்டும். 1999 நவம்பர் 2 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறுபத்து ஏழாம் அமர்வில் ஏற்கப்பட்ட உறுப்புரை 12 மீதான பொது கருத்துரை பின்வருமாறு குறிப்பிடுகிறது :

> *மட்டுப்பாடுகள் அனுமதிக்கப்படுவதற்கு , சட்டத்தால் வழங்கப்பட்டதாகவும் , ஒரு சனநாயக சமூகத்தில் இத்தகு நோக்கங்களின் பாதுகாப்பிற்கு அவசியமானதாகவும் , சமவாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட சகல பிற உரிமைகளுடனும் இணங்குவதாகவும் இருத்தல் வேண்டும் ( இல.27 பொதுக் கருத்துரையின் வாசகம் 11)*

v) இலங்கையில் தற்போது விதிக்கப்பட்டுள்ள ஊரங்கு உத்தரவு ( உதாரணமாக நடமாடும் சுதநதிரம் மீதான மட்டுப்பாடு) ஆனது பொது சுகாதாரத்தை பேணுதல் மற்றும் பொது ஒழுங்கின்மையைத் தடுத்தல் முதலான நோக்கங்களுக்கு ஆனது. இவ்விரு நோக்கங்களும் அரசியலமைப்பின் உறுப்புரை 15(7) இனாலும் எமது சர்வதேச கடப்பாடுகளாலும் எடுத்து நோக்கப்பட்டுள்ளது.

vi) இதனால் எமது கவனத்தை நாடும் முக்கிய விடயம் , ஊரடங்கு உத்தரவு ஆனது எமது அரசியலமைப்பு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சார் கடப்பாடுகள் என்பனவற்றின் தேவைப்பாடுகளிற்கு இணங்க சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ளதா என்பதாகும்.

vii) **<u>1897 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புக் கட்டளைச் சட்டம்</u>**

அ) நடைமுறையில் செயற்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு ஆனது , 31 ஆம் இலக்க 1897 ஆம் ஆண்டின் (திருத்தப்பட்டவாறு) தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் இருந்து வெளிப்படும் அதிகாரங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனப் புலனாகிறது. இக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 ஆனது " இலங்கையுள் ஏதேனும் நோயின் அறிமுகத்தை தடுத்தல் மற்றும் இலங்கையின் உள்ளேயும் வெளியேயும் ஏதேனும் நோயின் பரவலைத் தடுத்தல் முதலான நோக்கங்களிற்காக" அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அதிகாரம் அளிக்கிறது. பிரிவு 2(1) இன் கீழ் அமைச்சர் ஆக்கக்கூடிய ஒழுங்குவிதிகளின் விடயங்கள் ஆனவை ஊரடங்கு உத்தரவை விதித்தல் முதலான நடமாடுதலில் பெரும் மட்டுப்பாடுகளை உள்ளடக்காது. "நோய் தொடர்பான சகலவற்றையும், நோயுற்ற நபர்களையும் தனிமைப்படுத்தும்" - உதாரணமாக நோய் தொற்றுள்ள மக்களை தனிமைப்படுத்தல்- வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் மட்டுமே, இப்பிரிவு அனுமதிக்கிறது.

கொவிட் 19 உலகம் பரவு நோயின் பரவலைத் தொடர்ந்து , இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சர் பல ஒழுங்கு விதிகளை வெளியிட்டுள்ளார். எவ்வாறாயினும் அவை எவையும் எவ்வகையிலுமான போக்குவரத்து மட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. அமைச்சர் எச்ச வாசகமான பிரிவு 3(2) இனுடன் வாசிக்கப்படும் பிரிவு 2 இன் கீழ் எந்த ஒழுங்குவிதியையும் ஆக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆ) 2020 மார்ச் 25 அன்று அமைச்சரால் வெளியிடப்பட்டு அதே தினம் வர்த்தமானி இல 2168/6 இல் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களிற்காக இலங்கை முழுவதிற்குமான 'தகுந்த அதிகாரமுடையவராக' சுகாதார சேவை தலைமை இயக்குநரை நியமிக்கிறது. 2020 மார்ச் அன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் (2020 மார்ச் 25 இன் வர்த்தமானி இல 2168/6) ஆனது தகுந்த அதிகாரமுள்ளவருக்கு ஒரு இடத்தை 'நோயுற்ற இடமாக' அழைக்க அதிகாரம் அளிக்கிறது:

*நோயுற்ற இடம் என்பது நோய் தொற்றுள்ள அல்லது நோய் தொற்றக்கூடியதாக சந்தேகப்படக்கூடிய அல்லுத நோய் தொற்றுள்ளதாக பிரகடனப்படுத்தப் படக்கூடிய தகுந்த அதிகார சபையால் நோயுள்ள இடமாக குறித்தக் காலத்திற்கு நிர்ணயிக்கப்படும்*
*ஏதேனும் இடம் ஆகும் (ஒழுங்கு விதி 2).*

இ) எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட நோயுள்ள இடங்களின் மீது 'முறையான அதிகாரிகள்' செயற்படுத்தப்படக்கூடிய அதிகாரங்களை அண்மைய ஒழுங்குவிதிகள் குறித்துரைக்கவில்லை. 1925 ஆம் ஆண்டின் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்கள் தடுப்பு ஒழுங்கு விதிகளின் (திருத்தப்பட்டவாறு) கீழ் "நோயுள்ள இடங்களுள்" உட்புகுவதையோ அல்லது வெளியேறுவதையோ தடுப்பதற்கு பிற விடயங்களுடன் தகுந்த அதிகார சபை அதிகாரம் பெற்றுள்ளது (பொது ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 55). கொவிட் 19 வைரஸ் தொற்றுள்ள நபர்கள் இனம் காணப்பட்டிருந்த குறித்த இடங்களுடன் தொடர்புற்று இத்தகு அதிகாரங்கள் அண்மையில் செயற்படுத்தப்பட்டமையை நாம் அவதானித்தோம் (உதாரணம் சுதுவெல, அக்குரண, பேருவல, வெலிசர கடற்படை முகாம்களின் இடங்கள்). குறித்த இடங்களுடன் (நோயுள்ள நபர்கள் ஏலவே இனம் காணப்பட்டுள்ள) தொடர்புடைய இவ் அதிகாரங்கள், நோய் தடுப்பு நோக்கங்களுக்காக பிற மாவட்டங்களுக்கு அல்லது நாடு முழுவதும் ஊரங்கு உத்தரவை பிரகடனப்படுத்த நீட்டிக்கப்பட முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது ஆகும். நடைமுறையில் உள்ள எந்த தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளும் தகுந்த அதிகாரிகளுக்கு அத்தகு விரிவான அதிகாரங்களை வழங்குவதற்கு எடுத்துரைக்கவில்லை.

(ஈ) மறுபுறம் கொள்ளை நோய் ஒன்றின் போது அல்லது உலகம் பரவு நோய் ஒன்றின் போது நோய் தடுப்பு நோக்கங்களுக்காக 'நோயுள்ள இடங்களுக்கு' அப்பால் நடமாட்டத்தை மட்டுப்படுத்தும் அவசியத் தன்மைக்காக கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3(2) இனால் விதந்துரைக்கப்பட்ட பரந்த அதிகாரங்களை சுகாதார அதிகார சபைகளின் அறிவுரையின் மீது, பொது சுகாதார நோக்கங்களுக்காக ஊரங்கு உத்தரவை பிரகடனப்படுத்த பொருத்தமுடைய அதிகாரிகளிற்கு அதிகாரங்களை அளிக்க ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு உபயோகிக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. பிரிவு 3(2) பின்வருமாறு குறிப்பிடுகிறது ;

*எப்போதும் வழங்கப்பட்டதிற்கு அமைய பிரிவு 2 இனால் அமைச்சருக்கு விதந்துரைக்கப்பட்ட அதிகாரங்களின் பொதுத் தன்மையை இப்பிரிவின் எதுவும் கட்டுப்படுத்தல் அல்லது தடை செய்தல் ஆகாது. ஆயின் இத்தகு அதிகாரங்கள் இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஒத்த அல்லது அவ்வாறல்லாத சகல விடயங்களிற்கும் இக்கட்டளைச் சட்டத்தின் சிறந்த விளைவிற்காக சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு நீட்டிக்கலாம்.*

viii)<u>16 ஆம் இலக்க 1865 ஆம் ஆண்டின் பொலிஸ் கட்டளைச் சட்டம்</u>

இலங்கையில் கொவிட் 19 வைரஸ் தொற்றின் பரவலின் பின்னர் பதில் பொலிஸ் பொது ஆய்வாளர் 20 மார்ச் 2020 அன்று 'நாடு முழுவதுமான பொலிஸ் ஊரங்கு உத்தரவு பிரகடனம்' எனும் தலைப்பின் கீழ் பின்வரும் பிரகடனத்தை வெளியிட்டார்:

*புதிய கொரோனா வைரஸ் எனப்படும் கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக*

*நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின்*

*பிரிவுகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றை மீறலை தடுக்கும் நோக்குடன் நாடு முழுவதும் 20.03.2020 இன் 1800 மணித்தியாலங்கள் தொடக்கம் 23.03.2020 இன் 0600 மணித்தியாலங்கள் வரை பொலிஸ் ஊரங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டது.*

இப்பிரகடனம் குறித்து பொதுமக்கள் தகவலுக்கான தலைமை இயக்குநரால் பொது மக்களிற்கு தெரிவிக்கப்பட்டது.

மார்ச் 20 தொடக்கம் ஊரடங்கு உத்தரவு தொடர்பான பல பிரகடனங்கள் சனாதிபதியின் ஊடகப்பிரிவால் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் சனாதிபதியின் ஊடகப்பிரிவின் அறிவித்தல்கள் தொடர்பான பொலிஸ் பிரகடனங்கள் பொது மக்களிற்கு கிடைக்கப் பெறவில்லை. 2020 மே 27 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பதில் பொலிஸ் ஆய்வாளருக்கு, மார்ச் 20 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவு தொடர்பான சகல பொலிஸ் பிகைடனங்களின் நகல்களும் அவை தொடர்பான சுகாதார அதிகார சபைகளின் அறிவுறுத்தல்களுடன் பொது மக்களுக்கு கிடைக்க வழியமைக்குமாறு ஒரு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஆணைக்குழுவிற்கு ஒரு பதில் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

16ஆம் இலக்க 1865 ஆம் ஆண்டின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 56 ஆனது 'சமாதானத்தை பாதுகாத்தலுக்கான' கடமை உள்ளிட்ட ஒவ்வொரு பொலிஸ் அதிகாரியினதும் கடமைகளைக் குறித்துரைக்கிறது. கட்டளைச்சட்டத்தின் முழுமையான பரீட்சித்தல் ஆனது பொலிஸின் பொது அதிகாரங்கள் ஊரடங்கு உத்தரவை பிரகடனப்படுத்தலை உள்ளடக்காது என்பதைக் காட்டுகிறது. 'பொலிஸ் ஊரடங்கு உத்தரவு' ஆனது ஒரு வழக்கமாக பரிணமித்துள்ளது என்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும் 'பொலிஸ் ஊரடங்கு உத்தரவு' எனும் அடிப்படையின் மீது பொலிஸாரால் ஊரடங்கு உத்தரவை மீறியமைக்காக பாரியளவான கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

உலகம் பரவு நோயை கட்டுப்படுத்துவதற்கு பொது சுகாதார அதிகார சபைகளிற்கு உதவியளிக்கும் முகமாக பொலிஸ் திணைக்களங்களம் மற்றும் பிற திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பங்கினை ஆணைக்குழு தொடர்ச்சியாக பாராட்டி வருகிறது. எவ்வாறாயினும் இச்சகல அதிகார பூர்வ செயற்பாடுகளும் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டு அமைய வேண்டும் என்பது முக்கியமானது ஆகும்.

ix) <u>13 ஆம் இலக்க 2005 ஆம் ஆண்டின் இலங்கை பேரிடர் முகாமைத்துவச் சட்டம்</u>

மேற்குறிப்பிட்ட சட்டத்தில் 'பேரிடர்' எனும் பதத்தின் விளக்கம் ஆனது கொள்ளை நோயையும் குறித்துரைக்கிறது (பிரிவு 25). எவ்வாறாயினும் சனாதிபதியால் 'பேரிடர் காலம்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே பேரிடர் காலத்தின் போது மேற்கொள்ளப்படக்கூடிய அசாதாரண நடவடிக்கைகள் தகுந்த அதிகார சபைகளால் மேற்கொள்ளப்படலாம். பாராளுமன்ற அமர்வு ஒன்று காணப்படாத போது அத்தகு பிரகடனம் ஒன்று மேற்கொள்ளப்படவும் இயலாது.

x) <u>25ஆம் இலக்க 1947 ஆம் ஆண்டின் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம் (திருத்தப்பட்டவாறு)</u>

ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களை பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. (பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பகுதி III இன் பிரிவு 16) :

(1) ஏதேனும் பிரதேசத்தில் பொது ஒழுங்கின் பராமரிப்பிற்கு அவசியம் எனக் கருதும் போது சனாதிபதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆணையின் மூலம், அவ் ஆணையின் மூலம் அல்லது இப்பகுதியின் கீழான ஏதேனும் பின்வரும் ஆணை மூலம், விதிவிலக்கிற்கு உட்பட்டு, ஆணையால் குறித்துரைக்கப்பட்டுள்ள காலங்களிற்கு இடையில் அப்பிரதேசத்தில் உள்ள எந்தவொரு நபரும் ஏதேனும் பொதுப்பாதை, புகையிரத நிலையம், பொது பூங்கா, பொது பொழுதுபோக்கு நிலையம் அல்லது பிற பொது நிலையம் அல்லது கடற்கரை என்பனவற்றில், ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நபர் ஒருவரால் வழங்கப்பட்ட எழுத்து மூலமான அனுமதியுள்ள அதிகாரம் அற்று இருத்தல் ஆகாது…

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2(3) இனை பின்பற்ற தேவைப்படுத்தப்பட்ட போதும் அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவதற்கு பகுதி III இன் கீழான அதிகாரங்களை நோக்குதல் அவசியம் அற்றது:

(1) பிரிவு 12, பிரிவு 16 அல்லது பிரிவு 17 என்பனவற்றின் கீழ் ஆக்கப்படும் ஆணை ஒன்று, அவ் ஆணையின் முந்தைய மீட்பு அல்லது ஆணைக்கான காலத்தின் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் தொடர்ந்து ஆணை ஒன்றை ஆக்குதல் என்பனவற்றிற்கு பாதிப்பின்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு மாத காலத்திற்கு செயற்பாட்டில் இருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 2 இன் உபபிரிவு (3) இன் பிரிவுகள் அவ்வாறே பிரிவு 12 பிரிவு 16 அல்லது பிரிவு 17 என்பனவற்றின் கீழ் ஆக்கப்படும் ஆணை ஒன்றின் மீது, பிரிவு 2இன் உபபிரிவு (1) இன் கீழ் ஆக்கப்பட்ட பிரகடனம் ஒன்றின் மீது பிரயோகிக்கப்படும் விதத்தில் பிரயோகிக்கப்படும்.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2(3) குறிப்பிடுவதாவது

*இப்பிரிவின் முந்தைய பிரிவுகளின் கீழ் பிரகடனம் ஒன்று ஆக்கப்படும் போது அத்தருணம்*

*உடன் பாராளுமன்றிற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் பாராளுமன்றம் ஏதேனும் வகையில் ஒத்தி வைக்கப்பட்டிருப்பின் அல்லது பத்து நாட்களுள் முடிவுறாத கூட்டத் தொடர் நீட்டிப்பு காணப்படின் பத்து நாட்களுள் பாராளுமன்ற கூட்டத்திற்கான ஆணை ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் பிரகடனத்தரல் நியமிக்கப்பட்ட தினத்தில் அவ்வாறே பாராளுமன்று கூடி , ஒத்தி வைக்கப்பட்டு அல்லது நீட்டிக்கப்பட்டு இருந்தவாறு*

*தொடரப்பட வேண்டும்*

*உபபிரிவு (1) இன் கீழ் பிரகடனம் ஒன்றை ஆக்கும் தருணம் ஆனது இவ் உப பிரிவால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கூடுவதற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ள போது பாராளுமன்றம் கூடாது என்ற காரணத்தால் பாராளுமன்றத்திற்கு தெரிவிக்கப்பட முடியாது*

*என்பது இப்பகுதியின் கீழ் மேற்கொள்ளப்பாட்ட எதனையும் இக்கட்டளைச் சட்டத்தின் பகுதி*

*II இன் உறுப்புரைகளை அல்லது பிரகடனத்தின் செயற்பாட்டை அல்லது வலிதாந்தன்மையை எவ்விதத்திலும் பாதிக்காது. அத்தகு தருணத்தில் அதன் பின்னர் பாராளுமன்றம் உடனடியாகக் கூடுவதற்கு அழைப்பாணை விடுக்கப்பட வேண்டும்.*

'பொது ஒழுங்கை' பாராமரித்தல் எனும் கருத்தேற்பு ஆனது பொது ஒழுங்கின்மையை தடுத்தல் குறித்து கருத்துரைப்பதற்கு உயர்நீதிமன்றத்தால் இனம் காணப்பட்டுள்ளது. சாந்தியையும் அமைதியையும் பரவலாக மீறுதல் பொது ஒழுங்கின்மையை விளைவிக்கிறது. பொது அமைதி பொது பாதுகாப்பு சமாதானம் என்பனவற்றுடன் ஒத்த கருத்துள்ள குறுகிய கருத்தேற்பான பொது ஒழுங்கை எடுத்துக்காட்டி 'சட்டம் மற்றும் ஒழுங்கு' மற்றும் 'பொது ஒழுங்கு' மீறல்களை வேறுபடுத்திய இந்திய உயர்நீதிமன்றின் சட்டவியலை உயர்நீதிமன்று விரிவாக எடுத்து நோக்கியுள்ளது. (Siriwardene v. Liyanage) தற்போதைய உலகம் பரவு நோய் போன்ற கடும் பொது சுகாதார நெருக்கடிகள் பொது மக்களின் பயம் மற்றும் பாதுகாப்பின்மை முதலானவற்றில் இருந்து வெளிப்படும் பொது ஒழுங்கின்மையை தோற்றுவிக்கிறது. உயர்நீதிமன்றால் எடுத்துரைக்கப்பட்ட பொது பாதுகாப்பு எனும் கருத்தேற்பு ஆனது அவசரகால சந்தர்ப்பங்களில் பொருத்தமாகிறது. நோய் போன்றவற்றின் தோற்றுவாய் குறித்த பொது மக்களின் சந்தேகங்கள் மற்றும் பயம் என்பனவற்றில் இருந்து தோன்றும் விரோதம் மற்றும் வன்முறை என்பவற்றை தடுக்கும் முகமாக தீவிர நோயின் பரவலில் இருந்தான பொது மக்களின் பாதுகாப்பு ஆனது பொது ஒழுங்கின் அக்கறைகளுக்காக நடமாடும் உரிமையை மட்டுப்படுத்துவதை நியாயப்படுத்தும் சகல ஏதுக்கள் ஆகின்றன.

இதே போன்று நடபடிமுறை நோக்கில் கடந்த ஆண்டு 21 திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து சகல மாவட்டங்களிலும் பொது ஒழுங்கினை பேணுவதற்கு ஆயுத படைகளை அழைக்க ஆணை பிறப்பிக்க பொதுமக்கள் பாதுதகாப்பு சட்டத்தின் பகுதி II இன் கீழ் பிரிவு 12 இனை சனாதிபதி நோக்கியுள்ளதையும் நாம் அவதானிக்கிறோம். சனாதிபதியின் ஆணை ஆனது ஒவ்வொரு மாதமும் மீள்புதுப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் மீள் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மிக அண்மையில் 2020 மே 21 திகதி இல 2176/ 17 வர்த்தமானியில் பிரசுரித்துள்ளது.

xi) <u>பரிந்துரைகள்</u>

அ) 21 ஆம் இலக்க 1996 ஆம் ஆண்டின் சட்டத்தால் அளிக்கப்பட்டவாறு அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் காரணங்களிற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் இவையாகும்.

நிகழ் காலத்தில் நாட்டைப் பற்றியுள்ள சுகாதார நெருக்கடியின் போது பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரம் முதலான அக்கறைகளிற்காக நடமாடும் சுதந்திரம் தொடர்பான மட்டுப்பாடுகள் (உதாரணமாக ஊரடங்கு உத்தரவை விதித்தல், நோயுற்ற இடங்களில் நடமாட்டத்தைக் மட்டுப்படுத்தல் ) ஒரு முக்கிய அவசியம் ஆகும் என்பதை ஆணைக்குழு மீளவலியுறுத்துகிறது. எவ்வாறாயினும் அத்தகு கட்டுப்பாடுகள் சட்டவாட்சியை மீறல் ஆகாது. அரசியலமைப்பு மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சார் கடப்பாடுகள் இரண்டும் அனுமதிக்கதகு நோக்கங்களை அடைய வேண்டி சட்டத்தால் மட்டும் விதிக்கப்படும் நடமாடும் சுதந்திரம் மீதான மட்டுப்பாடுகள் சட்ட ரீதியானது என எடுத்துரைக்கிறது. பொது சுகாதாரம் மற்றும் பொது ஒழுங்கு என்பவற்றைப் பாதுகாத்தல் ஆனது அனுமதிக்கத்தகு இலக்குகள் ஆகும். இப்பரிந்துரைகளால் எடுத்துரைக்கப்படும் முக்கிய விடயம் ஆனது சட்டத்தால் மட்டுப்பாடுகள் எவ்விதத்தில் விதிக்கப்பட வேண்டும் என்பது ஆகும்.

ஊரடங்கு உத்தரவை விதித்தலானது இரு வழிகளில் ஒழுங்கு படுத்தப்படலாம் என ஆணைக்குழு கருதுகிறது.

(i) சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஆணை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 16 இன் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமைக்கு அமைய ஊரடங்கு உத்தரவு பிரகடனப் படுத்தக்கூடிய மிக எதேச்சாதிகாரமான முறை இது ஆகும். உலகம் பரவு நோய் தீர்க்கமான நடவடிக்கையை வேண்டுகிறது ; நடமாடும் உரிமை மீதான தொடரும் மட்டுப்பாடுகளால் பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ள அளவினைக் கருத்திற் கொள்ளும் போது இத்தெரிவு கடுமையானதாக இருக்கலாம். மேலும் பிரிவு 16 இன் கீழான அதிகாரங்களை பயன்படுத்த நாட்டின் அவசரகாலநிலை பிரகடனத்தை பிரயோகிக்கும் தேவைப்பாடு இல்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்; அல்லது

(ii) பிரிவு 2 இன் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியை தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3(2) இனுடன் வாசிக்க. ஆணைக்குழுவின் அவதானிப்பின் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட்ட 'முறையான அதிகார சபையானது' 'நோயுள்ள இடங்களின்' மீது மாத்திரம் நடமாட்டத்தைக்

மட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இத்தகு அதிகாரங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவை விதிப்பதற்கு பரந்த அதிகாரத்தை வழங்கவில்லை.

ஆ) ஊரடங்கு உத்தரவு பிரகடனம் மற்றும் சகல பிற வகையான நடமாட்டத்திற்கான மட்டுப்பாடு என்பனவற்றில் வெளிப்படைத்தன்மை காணப்படுதல் என்பது முக்கியமானது ஆகும். ஊரடங்கு உத்தரவு தொடர்பான சகல பிரகடனங்களும் பொது மக்களிற்கு கிடைக்கப் பெறுமாறு முறையே வழிவகை செய்யப்பட வேண்டும். தற்போது சனாதிபதியின் ஊடகத்துறை ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தல் மற்றும் நீக்குதல் குறித்து அறிவிக்கிறது. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பொலிஸ் தற்போது ஊரடங்கு உத்தரவை பிரகடனப் படுத்துவதாக அறிந்த போதும் அவை தொடர்பான பிரகடனங்கள் பொது மக்களிற்கு கிடைக்கப் பெறவில்லை.

இப்பரிந்துரைகள் எவையும் கொவிட் 19 தொடர்பான பொது சுகாதார அதிகார சபைகளால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களிற்கு முரணாக பொது மக்களில் எவரேனும் ஒருவரேனும் இயங்குதலை கட்டாயப்படுத்தாது என்பதை வலியுறுத்த ஆணைக்குழு விரும்புகிறது.

தலைவர்

மனித உரிமைகள் ஆணைக்குழு

08/07/2020

பிரதி: மதிப்பிற்குரிய சட்டமா அதிபர்

செயலாளர் / சுகாதார அமைச்சு

தலைமை இயக்குநர் / சுகாதார சேவை